பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 28உ (14—10—67) சனி வெளியூர் : புரட்டாசி 29உ (15—10—67) ஞாயிறு [இதழ் : 101

நெல் விலையை உயர்த்திப் பயனில்லை!

மற்றப் பண்டங்களின் விலையைக் குறைக்க முயலுகிறோம்

செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகளிடை முதலமைச்சர் அண்ணா கருத்துரை

காஞ்சிபுரம், அக். 13—

"'நெல்லின் விலையை உயர்த்தி உதவ வேண்டும்' என்று கூறப்படுகிறது. 'உதவி' என்பது, பல உருவிலும் கிடைத்திடலாம்; நெல் விலையை உயர்த்துவது ஒன்றே உதவியாகிவிடாது!

"விவசாயத்துக்காக விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தும் பண்டங்களின் விலையைக் குறையச் செய்வதால் அந்த உதவியை அளித்திட முடியும்; அதை எப்படிச் செய்வதென்பது குறித்து அரசு யோசித்து வருகிறது; அதை நடைமுறையில் கொண்டுவர உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் தேவை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகள் கருத்தரங்கு, இன்று காஞ்சிபுரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி திறந்தவெளி அரங்கில், வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், கருத்தரங்கினைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள்.

செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அ. பொ. அரசு, இராசரத்தினம், எம். கோபால், செ. கோ. விசுவநாதன், கே. எம். இராசகோபால், நா. கிருட்டினன், சி. வி. எம். அண்ணாமலை, கொளத்தூர் கோதண்டம், கா. வேழவேந்தன், ப. நாகலிங்கம் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் கே. விநாயகமும் கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி. சிட்டிபாபு, எஸ். கே. சம்பந்தன் ஆகியோரும் வந்திருந்தனர்.

அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது :—

"கருத்தரங்கிலே எடுத்துரைக்கப்படுகின்ற கருத்துக்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்; விவசாயச் செலவு இப்போதிருப்பதைவிடக் குறைய வேண்டும்; தேவையான உரமோ, பணமோ தேவையான நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும்; இவை, இயற்கையாக எந்த விவசாயியிடத்திலும் எழக்கூடிய கருத்துக்களே!

இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு தக்க பரிகாரம் காணப்படுமென்று உறுதி கூறுகிறேன். இதை, எக்காலத்தில்—எந்த வகையில்—எந்த அளவில் வேண்டுமென்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் உரிமையை எனக்கு வழங்குங்கள்.

விவசாயிகள் விசாரப்படாதிருக்கும்படியாக—அவர்கள் உற்சாகத்துடன் இருக்கும்படியாகச் செய்வதற்கு நானும், என்னைச் சார்ந்த நண்பர்களும் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

(பேச்சின் பிற்பகுதி பின்னர்)

உ.பி. ஆளுங் கட்சிக்கு புதிய தலைவலி!

புதுடில்லி, அக். 13—

உத்தரப் பிரதேச ஐக்கிய முன்னணி அமைச்சரவையிலிருந்து சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியினரும், வலது கம்யூனிஸ்டுக் கட்சியினரும் வெளியேற முடிவுசெய்து விட்டதன் விளைவாக, ஆளுங்கட்சியான சம்யுக்த விதாயக் தளம் ஒரு சோதனைக் கட்டத்தை எதிர்ப்பட்டிருக்கிறது.

நிலவரிப் பிரச்சினை தொடர்பாகத் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் இம் முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

ச. சோ. கட்சியைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களும், இரண்டு துணை அமைச்சர்களும் தங்கள் இராஜினாமாக் கடிதங்களை, மத்திய பார்லிமெண்டரிக் கட்சியிடம் அளித்துவிட்டதாகத் தெரிகிறது.

மற்றும் வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஓர் அமைச்சரும், ஒரு துணை அமைச்சரும் அமைச்சரவையிலிருந்து வெளியேறவிருக்கின்றனர்.

மணிப்பூரில் ஆட்சி மாற்றம்

இம்பால், அக். 13—

மணிப்பூரில் கடந்த 10 ஆண்டுக் கால காங்கிரசு ஆட்சி, 8 பேர் விலகி, கட்சி மாறியதால், பதவியிலிருந்து விலகியது!

லோங்ஜம் தாம் போசிங் தலைமையில் 5 பேர் அடங்கிய கூட்டணி அமைச்சரவை இன்று பதவியேற்றது.

சூரத் அருகே ஒரு வார்னிஷ் நிகழ்ச்சி

'ப்ரோக்' என்னும் இடத்தில், மருந்துக் கடைகளில் வாங்கப்பட்ட 'டிஞ்சரை' அருந்தியதால், 13 பேர்களில் எட்டுப் பேர் இறந்திருப்பதாகச் சூரத் செய்தியொன்று கூறுகிறது.

"தசரா வைபவத்தையொட்டி, கடைகளில் வாங்கப்பட்ட டிஞ்சரை 'போதை' பெறுவதற்காக அவர்கள் குடித்திருக்கலாம்" எனக் கருதப்படுகிறது.

போலீசார், 12 பாட்டில் டிஞ்சரை இத்தொடர்பில் கைப்பற்றி இருக்கின்றனர்!

நாது லா-- சோ லா-- ஜிலிப் லா!

"சிக்கிம்—திபேத் எல்லைப் பகுதியில் உள்ள 'ஜிலிப் லா' என்ற இடத்தில், செஞ்சீனா மீண்டும் படைக் குவிப்பை அதிகரித்து வருகிறது"

என, 'காங்டாக்' செய்தியொன்று கூறுகிறது.

சிக்கிம்—திபேத் கணவாய்ப் பகுதிகளில் இதுபோன்ற படைக் குவிப்புகளைச் செய்து அவ்வப்போது மோதுதல்களை நடத்திவருவதன் மூலம், சீனா—இந்தியா இராணுவத்தின் 'உஷார் தன்மை'யை செஞ்சீனா பரிசோதித்துப் பார்த்துக்கொள்கிறதோ எனக் கருதுவதற்கு இடம் இருப்பதாகப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

சென்ற சில கிழமைகளுக்குள்ளாக செஞ்சீனா, நாது லா, சோ லா பகுதிகளில் இராணுவ மோதுதல்களை உருவாக்கியதும் இந்தியச் சிப்பாய்கள் நூற்றுக் கணக்கானவர்களின் உயிர்—உடல் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

லோகியா மறைவு எதிரொலி :

ச.சோ.--பி.சோ.--கட்சி இணையுமா?

இணைப்புப் பாலமாவார் ஜெயப்பிரகாஷ்!

"லோகியாவின் மறைவினால் ஏற்பட்ட வெறுமை — கட்சி உறுப்பினர்கள் பங்குபெற்றிருக்கும் அமைச்சரவைகளின் குழப்பங்கள்—ஆகிய விளைவுகளின் காரணமாக, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் போக்கில் அடிப்படை மாறுதல்கள் தோன்றக்கூடும்" என, புதுடில்லி வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

"எஸ். எம். ஜோஷி, மது லிமாயி, ராஜ் நாராயண், ஜார்ஜ் பெர்னாண்டஸ் போன்ற தலைவர்கள் அக்கட்சியில் இருந்த போதிலும், புதிதாக எழுந்துள்ள மொழி விவகாரங்களில் அமைப்பை ஒற்றுமைப்படுத்திக் கட்டிக் காக்கும் திறமை எவருக்கும் இல்லை" என்று கூறப்படுகிறது.

"சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியில், இந்தி மொழி பேசுவோருக்கும்—இந்தி மொழி பேசாதோருக்கும் இடையே உள்ள தலைமைப் போட்டியின் காரணமாகவும் அதன் இயக்கம் இனி சுமூகமாக இருக்காது" என்பதும் நம்புவதற்கான காரணங்களில் ஒன்றுதான்.

கட்சி அளவில் மொழி வேற்றுமை கடந்து, எல்லாப் பகுதியினராலும் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் லோகியா; ஆனால், அடுத்து இருப்பவர்களில் எவரும், அனைத்திந்திய உறுப்பினர்களைக் கவர்ந்தவர்களல்லர் எனத் தெரிகிறது.

நிர்வாகத்தில் பங்கு பெற்று ஆளும் கட்சியாக வந்துள்ள மாநிலங்களிலும் ச. சோ. அமைப்பு, 'கொள்கை வெற்றி பெறும் அளவில் சரிவர இயங்கவில்லை' என்பதை மறைந்த லோகியாவே வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதனை அடுத்து, இக்கட்சியின் தற்போதைய தலைவர் ஜோஷி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு ஓர் இணைப்புக்கு வழி வகுப்பார் என்றும் நம்பப்படுகிறது.

"இந்த இரண்டு கட்சிகளுக்கிடையேயும் உறவுகள் தோன்றுவதற்குத் தமது பங்கினை—தேவைப்பட்டால் — தருவதற்குத் தயாராக இருப்பதாக ஜெயப்பிரகாஷ் நாராயணன் அறிவித்திருக்கிறார்" என்றும் புதுடில்லி செய்தியொன்று கூறுகிறது.

பர்மா அகதிகட்கு மறுவாழ்வு

தமிழக அரசின் உதவி

திருச்சி, அக். 13—

பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்பிய தமிழர்களுக்கு பண உதவியும், வீட்டு வசதிக் கடன்களும் வழங்குவதற்காக நீலகிரி, மதுரை, திருச்சி, வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்கட்கு மொத்தம் ரூ. 98,12,000 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இதில் வடாற்காடு மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 5,76,700 ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ரூ. 1,00,000-மும், தென்னாற்காடு மாவட்டத்திற்கு ரூ. 20,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் கடனுக்கு ரூ. 53 சதவிகித வட்டியுடன் 20 ஆண்டுகளில் வசூலிக்கப்படும்.

'அன்புக்கு நிறமில்லை' என்பார்கள்!

'அழுகைக்கு மொழிஇல்லை' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்!

ஆனாலும், இந்தி வெறி நுழையாத இடம் இல்லை!

இப்போது இடுகாட்டுக்கும் வந்துவிட்டது!

அன்பு காரணமாக அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் லோகியாவின் இறுதிச் சடங்கில் ஒன்றுகூடினார்கள்!

லோகியாவின் பிரிவு அங்கே கூடியிருந்த சிலருடையஇதய வலிவினையும் கடந்து, கண்ணீரை வெளிப்படுத்தியது!

'நிறம்'—'மொழி' ஆகியவற்றுக்கு வேலையே இல்லாத அந்த இடுகாட்டில், 'வெறி' மட்டும் வலிய வந்திருக்கிறது!

ஆமாம்; 'இந்தி மொழி', லோகியாவின் இறுதிச் சடங்கிற்கும் வந்திருக்கிறது!

மக்களவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி, மறைந்த லோகியா பற்றி இதயம் கசிந்து சில சொல்ல முற்பட்பட்டிருக்கிறார்!

'இந்தியில் பேசு' என அங்கேயும் சிலர் 'கோஷம்' போட்டனராம்!

அரசியலில் ஒருவகைத் துறவுக் கோலமே பூண்டிருக்கும் ஜெயப்பிரகாஷ் நாராயணன், லோகியாவின் மறைவு தாளாமல் தேம்பிக் கதறுகிறார்!

ஆனால், இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட சிலர், 'இந்தியில் பேசு' என, சஞ்சீவி ரெட்டி பேசுகையில் கூச்சல் போட்டிருக்கின்றனர்!

ஈமச் சடங்கு—முக்கியத் தலைவரின் எதிர்பாராத பிரிவு—என்றாலும், அங்கேயும் 'இந்தி' எப்படித் தலைதூக்கியிருக்கிறது பார்த்தீர்களா?

ஆங்கிலத்தில் பேசத் துவங்கிய சஞ்சீவி ரெட்டி, 'உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கட்டும்; என்னை இப்படியே பேசவிடுங்கள்; நான் தென்னிந்தியாவிலிருந்து வருபவன்; இந்தி தெரியாதவன்' என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்!

"'இராணுவத்தை அனுப்புவேன்' என சேத் கோவிந்த தாஸ் பேசியது அப்படி என்ன பெரிய விஷயம்—தென் சென்னை இடைத் தேர்தலில் அதனைப் பிரச்சினையாக்கிப் பேசுவதற்கு?" என இங்கே சில காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்கள்!

இந்த 'இடுகாட்டுச் செய்தி'க்கு என்ன பதில் சொல்வார்கள் இப்போது?

ஈமச் சடங்கில் பேசுவதற்கும் இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டுமா?

அன்பைக் காட்டிக்கொள்வதற்கும், இந்தி மொழியில் மட்டும்தான் அனுமதியா?

ஐயா—ஒரு குரல் அழவேண்டும்—அதுவும் இந்தி மொழியில்தானா?

இந்தியா, 'இந்தி'யாக வாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது!

—எஸ்.ஆர்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்லி

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 28 (14—10—67) சனி

டாக்டர் லோகியா மறைவு

'சமதர்மக் கோட்பாடுடையவர்களில் தலைசிறந்தவர்' எனப் பாராட்டபட்டுவந்த டாக்டர் ராம் மனோகர் லோகியா, தமது ஐம்பத் தேழாவது வயதில் மறைந்துவிட்டார். 'உடல் முழுவதும் மூளை' என்று காந்தியார் அவர்களாலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறார் என்றால், டாக்டர் லோகியா அவர்களின் அறிவாற்றல், குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

இருபதாண்டும் முற்றுப்பெறாத இளம் வயதிலேயே ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்த பெருமை அவருக்குண்டு. டாக்டர் லோகியாவின் கூர்ந்த மதியைக் கண்ட காலஞ்சென்ற பண்டித நேரு, அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் வெளிநாட்டு விவகாரத் துறையை அவரிடம் ஒப்படைத்தார். அப்பொழுது டாக்டருக்கு வயது இருபதே ஆகும்.

இப்படி இளமையிலேயே பண்டித நேருவின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் இருப்பிடமாக இருந்த லோகியா, பின்னர் நேருவை முழுமூச்சாகக் கண்டிப்பதில் முன்னணியில் இருந்துவந்தார். 'பொதுத் தேர்தலில் பண்டித நேருவை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது' என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்திருந்தும்கூடத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்டவர் லோகியா- பண்டிதரை எதிர்த்துப் போட்டியிடுவது, தமது அரசியல் கடமைகளில் ஒன்று எனக் கொண்டிருந்தார் அவர்.

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் அலுவலகத்தில் அவர் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்திலேயே, காங்கிரசுக் கட்சியிலிருந்த குறிப்பிடத்தக்க சிலருடன் சேர்ந்து, சோஷலிஸ்டுக் கட்சியைத் துவக்கினார். பின்னர் காங்கிரசு சோஷலிஸ்டுக் கட்சியை விட்டு வெளியேறி மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியைத் துவக்கி—அதற்குப் பின்னர் அதையும்விட்டு வெளியேறி சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைத் துவக்கி இறுதி மூச்சை விடுகின்ற வரையில் அக்கட்சியின் தனித் தலைவராக டாக்டர் லோகியா இருந்தார்.

தாம் கூறிவந்த சோஷலிசக் கோட்பாடுகளுக்கு அவரேதான் தந்தை. அவர் கூறிவந்தது எத்தகைய வியப்பளிக்கும் சோஷலிசமாக இருந்திட்டபோதிலும், 'சமுதாயத்தின் அடித்தளத்தில் சிக்கி வாழ்விழந்து கிடக்கின்ற பல கோடி மக்களுக்கு நல்வாழ்வினைப் பெற்றுத்தர வேண்டும்' என்பதில் அவருக்கு இருந்துவந்த ஆர்வமும் பற்றுதலும், மாசுமருவற்றதாகும்.

காங்கிரசுக் கட்சி பேசிவருகின்ற சனநாயக சோஷலிசம், 'வெறும் போலி' என்பது அவருடைய முடிவு. 'உண்மையான சோஷலிச சமுதாயத்தை இந்த நாட்டில் உருவாக்க வேண்டுமானால், அதற்குக் காங்கிரசுக் கட்சியை முதல் களபலியாகக் கொடுத்தாக வேண்டும்' என்பது அவருடைய தீர்மானம்.

தாம் கொண்டிருந்த இத்தீர்மானத்தின் விளைவாகவே, சென்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர், காங்கிரசல்லாத எதிர்க் கட்சிகளைக் கொண்ட பல கட்சி அரசாங்கத்தை அமைப்பதில் அவர் அரும் பாடுபட்டிருக்கின்றார். ஆனால், அவர் விருப்பப்படி அமைந்திருக்கின்ற பல கட்சிக் கூட்டு அரசாங்கத்துக்கு அவருடைய துணை தேவைப்படக்கூடிய தருணத்தில் அவர் மறைந்துவிட்டார்.

ஆங்கில மொழியின் மீது டாக்டர் லோகியா எந்த அளவுக்குப் பகை உணர்ச்சி கொண்டிருந்தார் எனபதை அறிய, 'ஆங்கில மொழிப் பயிற்சி அளித்துவருகின்ற ஆசிரியர்கள் மீது, மாணவர்கள் கல் வீச வேண்டும்' என, வெளிப்படையாக அவர் கூறியுள்ளதே போதியதாகும். ஆங்கில மொழியின் மீது அவர் கொண்டிருந்த பகை உணர்ச்சிக்குக் கொஞ்சமும் குறையாத அளவுக்கு இந்தி மொழியின் மீதும் அவருக்கு வெறி இருந்துவந்தது.

'நடுத் தெருவுக்கும்—நாடாளுமன்றத்துக்கும் அறவே வேற்றுமை கிடையாது' எனக் கருதத்தக்க முறையில், காலஞ்சென்ற டாக்டர் லோகியாவும், அவர் கட்சியைச் சேர்ந்தவர்களும், நாடாளுமன்றத்தில் செயல்பட்டுள்ளனர். இதனால், நாடாளுமன்றச் செயல் முறைக்கு லோகியாவாலும், அவருடைய கட்சித் தோழர்களாலும் ஏற்பட்டிருக்கின்ற சிறப்பு எதுவுமில்லை.

சோஷலிசக் கோட்பாட்டிற்குத் தம் அறிவாற்றலால் லோகியா வலிவூட்டியுள்ளாரா இல்லையா என்பதை, இனித்தான் தெரிந்து கொள்ள முடியும், அவர் கூறிவந்த சோஷலிசம், அவர் மறைவுக்குப் பின், பட்டுப்போகாமல் இருக்குமா என்பதும் இனித்தான் தெரிய வேண்டும்.

தமக்குச் சரி என்று பட்டதை, ஒளிவு மறைவு இல்லாமல் வெளியிடுவதில், பிறர் மனம் புண்படுமா என்பதைப் பற்றி அவர் சிறிதும் கருதவே மாட்டார். துவக்கம் முதல் மரணத்தைத் தழுவுகின்ற வரையில், ஒரு போராட்டவாதியாகவே அவர் செயல்பட்டு வந்திருக்கின்றார்.

வெற்றி கண்ட அரசியல் தலைவர்களில், டாக்டர் லோகியாவை இணைத்துக் குறிப்பிடுவதற்கில்லை, இந்த உண்மையை, தாம் மரணத்துடன் போராடிக்கொண்டிருந்த நேரத்தில் டாக்டர் லோகியாவே தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தியாவில் சோஷலிசக் கருத்துப் பரவுவதற்குத் தம் வாழ் நாள் முழுவதும் அரும்பாடுபட்டு வந்திருக்கின்ற டாக்டர் லோகியாவின் பரு உடல் வெந்து நீறாகிவிட்டது. அவர் மறைவு, சோஷலிசக் கோட்பாட்டிற்கும், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

தங்கள் தலைவரின் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாது இருந்துவருகின்ற அவருடைய கட்சித் தோழர்களுக்கு நமது ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—கா. க.

கேரளத்தில்...

காந்திக் குல்லாய் மறைகிறது!

காங்கிரசு அமைச்சர்களே போடாததுதான் காரணம்!

கடைநிலை ஊழியர்கள் தங்கள் அலுவலக உடுப்புகளில் ஒன்றான காந்திக் குல்லாய் அணியும் நியதியை நீக்கவேண்டுமெனக் கோரிக்கை வந்ததையடுத்து, கேரள அரசு, இந்தக் கட்டாய வழக்கத்தினை நீக்கியிருக்கிறது!

கடந்த சில காலமாகக் கடைநிலை ஊழியர்களிலும், வயதானவர்கள் மட்டுமே காந்திக் குல்லாயை அணிந்து வந்தனர்! வாலிபர்கள் அதைப் புறக்கணித்து வந்தனர்!

'காங்கிரசு அமைச்சர்களிடையேகூட அந்தப் பழக்க வழக்கம் அழிந்துவரும்போது, எங்களுக்கு மட்டும் அந்தக் கட்டாயம் வேண்டாம்" என, கேரள அரசு ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

எதற்கு? எப்படி?

புதுடில்லி, அக். 12—

ராஞ்சியில் பிர்லா தொழில் நுட்பக் கல்லூரியில் பட்டப் படிப்பில் இறுதி ஆண்டில் படிக்கிற ஒரு மாணவர் பிர்லா நிறுவனம் ஒன்றிடமிருந்து மாதம் ரூ. 2875 பெறுகிறார்!

நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி செயலாளர் சந்திரசேகர் அளித்த மனுவில் இத்தகவல் காணப்படுகிறது!

பிர்லா நிறுவனம் ஒன்றில் நிர்வாகியாக இருக்கின்ற சாசாரியாவின் மகனான எஸ். பி. சாசரியாதான் அந்த மாணவர்; முந்திய ஆண்டில் இம்மாணவர், மாதந்தோறும் ரூ. 1,700 பெற்றுவந்தார்! தலைமை அமைச்சரிடம் இம்மனு அளிக்கப்பட்டது.

மேற்கு வங்காளத்திலுள்ள பிர்லா நிறுவனம் ஒன்றின் விற்பனை ஆலோசகர் என்ற ரீதியில் ஒரு பெண்மணி மாதந்தோறும் ரூ. 2,000 பெறுகிறார். இவ்வளவுக்கும் இப்பெண், பொதுவாக சண்டிகாரில் வாழ்கிறார்.

கிழக்கு இந்தியாவிலுள்ள மற்றொரு பிர்லா நிறுவனத்தின் 'வடிவமைப்பாளர்' என்ற முறையில், இப்பெண், மற்றும் ரூ. 1,250 பெறுகிறார்!

இந்தியாவுக்கு உணவு உதவி

கனடாவின் கருத்து

புதுடில்லி, அக். 14—

கனடிய அரசாங்கம், அடுத்த ஆண்டுக்கு இந்தியாவுக்குத் தேவைப்படக்கூடிய உணவு பற்றி மதிப்பீடு செய்ய ஆரம்பித்துள்ளது.

'இவ்வாண்டு விளைச்சல் நன்றாக இருக்கும்' என்று இந்தியா ஓரளவுக்கு நல்ல நம்பிக்கை கொண்டுள்ளது; ஆனால், 'உணவு விலைகள் கீழ்மட்டத்தில் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள இந்தியாவிடம் கையிருப்பாக 40 இலட்சம் முதல் 50 இலட்சம் டன் உணவு இருக்க வேண்டும்' என்று சில கனடிய அதிகாரிகள் நம்புவதாக ஆட்டவாவிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

"விளைச்சல் நன்றாக இருக்கிற ஆண்டிலும், விலைகள் விரும்பத்தக்க நிலையில் இருக்கும்படிச் செய்யவும், நாட்டின் அதிகரித்துவரும் மக்கட் தொகையின் கோதுமைத் தேவையை நிறைவு செய்யவும், இந்தியா, பல இலட்சம் டன் உணவை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்" என்று அந்த அதிகாரிகள் கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

கவனத்தில் வையுங்கள் -- சமயத்தில் உதவும்:

பொறுமை--அமைதி!

சொந்தக் கட்சியினருக்கு காங்கிரசுத் தலைவர் புத்திமதி

"அரசியலில் பொறுமையினைக் கடைபிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக, காங்கிரசு அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலத்தில், காங்கிரசுக்காரர்கள், அமைதியையும் பொறுமையையும் காட்டவேண்டும். புதிதாக ஆளும் கட்சியின்மீது பொருளில்லாத—பொருந்தாத கண்டனங்களை வீசக் கூடாது!

"நீங்கள் 20 ஆண்டுக் காலமாகப் பதவியில் இருந்தும், எத்தனையோ பிரச்சினைகளை நீக்க முடியாமல் விட்டிருக்கிறீர்கள்! இருந்தாலும், இப்போது ஆளும் மற்றக் கட்சியினருக்கு ஒரு ஆறு மாத காலத்துக்குமேல் அவகாசம் தர உங்கள் மனம் மறுக்கிறது"

என்று, 'பார்ப்பவர்கள் நம்மைக் குறை கூறும்படி நடந்துகொள்ளக் கூடாது' என்பதாகக் காங்கிரசுத் தலைவர் காமராசர் கருதுவதாகவும், அதே கருத்தினை, நடந்து முடிந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியிருப்பதாகவும் கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மென்' (12—10—67) இதழில் வெளியாகியுள்ள செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

நாள் ஒன்றுக்கு ஒரு வேலைநிறுத்தம்

பொதுத்துறை நிறுவனங்களின் ஒரு மாதத்திய நிலை!

கடந்த செப்டம்பர் 1-ந்தேதியுடன் முடிந்த ஒரு மாதகாலத்தில் நாடு முழுவதிலுமுள்ள பொதுத்துறை நிறுவனங்களில், நாள் ஒன்றுக்கு ஒரு வேலைநிறுத்தம் வீதம் நடைபெற்றிருக்கிறது!

வேலைநிறுத்தங்களின் சரியான எண்ணிக்கை 27 ஆகும்.

இவற்றில் 13—பெரிய துறை முகங்களில் நடந்தன! எட்டு—சுரங்கங்களில் நடைபெற்றிருக்கின்றன! எஞ்சிய ஆறு—சிந்திரி போன்ற தொழிற்சாலைகளில் நடந்திருக்கின்றன!

நாம் செய்த தியாகங்கள் வீணாகிப் போவதா?

சென்னை, அக். 12—

"சனநாயகத்தின் வெற்றியில் தான் மக்களின் உரிமைகள் ஓங்கும்; பெற்ற உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கவும் சனநாயகம் தழைக்க வேண்டும்.

"நாம் தப்பித் தவறியும் இந்தியை நுழையவிடுவோமானால்—விட்டுக்கொடுப்போமானால், மிகப் பெரிய தவற்றைச் செய்தவர்களாவோம்.

"எந்த இந்தி நுழையக்கூடாது என்பதற்காகப் பலரது உயிர்களைக் காணிக்கையாக அளித்தோமோ—மாணவ மணிகள் தடியடிபட்டார்களோ—அரிய தியாகங்களைச் செய்தார்களோ—அவையெல்லாம் வீணாகி விடும்!

"நாம் இந்தியை எதிர்க்கிறோம் என்பதற்கு அடையாளமாக மாறனை வெற்றிபெறச் செய்வோம்!

"ஆர்த்தெழுந்த மாணவர் பெரும் படைக்கு அண்ணா அவர்கள் அளித்த வாக்குறுதி நிறைவேற வேண்டுமானால்—நம் எதிர்கால சந்ததி இந்திக்கு அடிமைப்படாமல் இருக்கவேண்டுமானால்—தோழர் மாறனை தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்."

--க. அன்பழகன்

(தென் சென்னைக் கூட்டத்தில்)

மறுக்க இயலாத உண்மைகள்!

பல படிப்பினைகளைத் தந்திருக்கின்றன!

"வங்காளத்தில் ஆட்சியைக் கவிழ்க்க நடந்த சதி முயற்சி எதிர்காலத்திற்கான பல படிப்பினைகளைத் தந்திருக்கின்றன.

"கவர்னர்களை அரசியல் ஏஜெண்டுகளாகப் பயன்படுத்துவதும், அவர்களை முழுக்க முழுக்க அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும் எவ்வளவுஆபத்தானது என்பது அவற்றில் முக்கியமானது.

"திரு. தர்மவீரா — 'கவர்னர்' என்ற முறையில் — தனது கடமைகளை மறந்தார் என்பதும், காங்கிரசையும்—முதலமைச்சர் முகர்ஜியையும் ஒன்றுபடுத்த நடந்த கட்சி சார்பான முயற்சிகளில் அவர் பெரும் பங்கு வகித்திருக்கிறார் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்!

"திரு. தர்மவீரா தந்த ஒரு விருந்தில்தான் முகர்ஜியும், முன்னாள் முதலமைச்சர் பி. சி. சென்னும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்!'

என்று, 'டெக்கான் ஹெரால்டு' நாளேடு எழுதியுள்ளது.

அவசரக்கோலம் அழிவை ஏற்படுத்தும்

நாடு முழுவதும் இந்தியை ஏற்பது ஐயமே!

முன்னாள் கல்வி அமைச்சர் எச்சரிக்கை

பம்பாய், அக். 12—

"மொழிப் பிரச்சினையில் அரசினர், அவசர கோலமோ அல்லது ஆத்திரமோ காட்டக் கூடாது; அவசரப் புத்தியைக் காண்பித்தால், நாசகர விளைவுகளும், நாட்டில் குழப்பமும் தான் ஏற்படும்.

"நாடு முழுவதும் இந்தியை ஏற்றுக்கொண்டால், அது, ஆங்கிலத்திற்குப் பதில் இணைப்பு மொழியாகலாம்; ஆனால், இந்தியை நாடு முழுவதும் ஏற்றுக்கொள்ளுமா என்பது ஐயமே! தென்னகத்தைப் போலவே அசாமும், வங்கமும் இந்தியை எதிர்க்கின்றன"

என்று, மத்திய அரசின் முன்னாள் கல்வியமைச்சர் சாக்ளா, சுழற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் எச்சரித்துள்ளார்.

தானிய உற்பத்தி-விநியோக பணிகள்

சுறுசுறுப்பாக்க நிபுணர் குழு

சென்னை, அக். 14—

தமிழக முதலமைச்சர் வேளாண்மைத் துறையைத் தற்காலிகமாகத் தமதுபொறுப்பில் கொண்டு வந்ததையடுத்து, தானியக் கொள்முதல் மற்றும் விநியோகப் பணிகளைச் சுறுசுறுப்பாக்கும் திட்டங்களை இயக்குவதற்காக, அமைச்சரவை, நிபுணர் குழு ஒன்றை அமைத்துச் செயலில் இறங்கிவிட்டதாகத் தெரிகிறது.

அண்மையில் கல்வி, மற்றும் தொழில்களுக்காக அமைக்கப்பட்ட ஏனைய இரு குழுக்களும் தத்தமது துறைகளில் ஆய்வு நடத்திவருகின்றன என்றும், அவை விரைவில் முதலமைச்சருடனும், பிற அமைச்சர்களுடனும் கூடி அமர்ந்து, வேளாண்மை—கல்வி—தொழில்கள் ஆகியமூன்று முக்கியமான துறைகளிலும் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை வகுக்கும் என்றும் மேம்பாட்டுத் துறைச் செயலாளர் தெரிவித்தார்.

நெல்லை--குமரி இரயில் பாதை திட்டம்

இப்போது இல்லையாம்

கோவை, அக். 12—

"நீண்ட நாட்களாக நிறைவேறாமலிருக்கும் நெல்லை—குமரி இரயில் பாதைத் திட்டம் இப்போதாவது செயல்படுத்தப்படுமா?"

என்று செய்தியாளர்கள், மத்திய இரயில்வேத்துறை துணையமைச்சர் பரிமள் கோஷைக் கேட்டனர்.

"நெல்லை — குமரி இரயில் பாதைத் திட்டம் இப்போது மேற்கொள்ளப்படமாட்டாது; நிதி நெருக்கடி காரணமாக அத்திட்டத்தை இப்போது மேற்கொள்ளுவதற்கில்லை" என்று அமைச்சர் கூறினார்.

சிறைக் கைதிகள் மூலம் அரசுக்கு ரூ. 1 கோடி

பிரிட்டிஷ் சிறைகளிலுள்ள கைதிகள், தமது தண்டனைக் காலத்தை கல்லுடைத்தோ, அஞ்சல் பைகளைத் தைத்தோ, வேறு சிறு தொழில்களைச் செய்தோ கழிக்கவில்லை!

மாறாக, புதிய தொழில் வினைமுறைகளைச் சிறை அதிகாரிகள் தொழிற்சாலைகளுக்கு அறிமுகம் செய்கின்றனர்; தொழிலாளர் பற்றாக்குறையுள்ள பகுதியின் தொழிலாளர்களுடன் ஒத்துழைத்து இயந்திரங்களை இயக்கச் சிறைகளிலிருந்து ஆட்களை அனுப்புகின்றனர்.

சிறைக் கைதிகள் பலர், பிரிட்டனின் போக்குவரவு அமைச்சகத்திற்காக இப்போது சாலைக் குறிகளைச் செய்துவருகின்றனர்; 100 கைதிகள் சிப்பம் கட்டும் வேலையில் முனைந்திருக்கின்றனர்; விமான இணைப்பு உறுப்புகளைச் செய்யும் நவீன இயந்திரக் கருவிகளைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைத் தொழில்களால் அரசிற்கு ஓராண்டில் சுமார் ரூ. 1 கோடி கிடைத்து வருகிறது என்றும், அது சிறைகளைப் பராமரிக்க உதவுகிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ந, தருமலிங்கம்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

நவ. 14, 15, 16: சென்னை; 17: ஓவரூர்; 19: திருப்புலாணி; 20: கீழக்கரை; 21: மன்னார்குடி; 22: திருவாரூர்; 23, 24, 25: தொகுதி சுற்றுப்பயணம்.

வல்லம் ஊராட்சி இடைத் தேர்தல்

வல்லம் பேரூராட்சி மன்ற 8-வது வார்டுக்கு இரண்டு இடங்களுக்கு 5—10—67-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் கழகத் தோழர்கள் சோ. தம்பித்துரையும், சொ. பொன்னுசாமியும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காங்கிரசுக்கு அடி கொடுக்க மாறனை ஆதரிப்பீர்!

தென் சென்னை வாக்காளர்களுக்கு இராஜாஜி வேண்டுகோள்

"தமிழக முதலமைச்சர் காலி செய்ததால் உண்டான இடத்தில் நிற்பதற்கு மாறன் தேர்வு செய்யப்பட்டிருப்பதறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

"மாறன், 33 வயதான உயர் பண்பாளர்; எல்லா வழிகளிலும் அவர் ஒரு சிறந்த வேட்பாளர்; தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர், நாடாளுமன்றத்தின் சிறந்த உறுப்பினராக விளங்குவார். அவர் தேர்ந்தெடுக்கப்படுவாரென்று நான் நம்புகிறேன். பொருளாதாரத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம் ஏ. பட்டத்தைப் பெற்றவர்.

"அவமானத்துக்கிடமாக நொறுங்கிச் சிதைந்து கிடக்கும் தன் அரசியல் அந்தஸ்தையும் மீறித் தலைதூக்க முயலும் காங்கிரசுக்குப் படுதோல்வி உண்டாகும்படி அடி கொடுக்கவும், மாறனது வெற்றிக்காகவும் சுதந்தரக் கட்சியின் ஊழியர்கள் முழுமனத்தோடு உழைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

"காங்கிரசுக்கு எதிராக, தான் ஏற்கனவே கொடுத்த தீர்ப்பினை தென் சென்னை மீண்டும் உறுதிப்படுத்திட வேண்டும்."

—'சுயராஜ்யா'

மக்கள் பேரன்புக்குரிய மாறனை ஆதரிப்போம்!

"திரு. அண்ணாதுரை மாநில முதலமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தனது மக்கள்சபை ஸ்தானத்தை விட்டு விட்டதால், தென் சென்னையில் மீண்டும் மக்கள்சபைக்கான தேர்தல் நடக்கிறது.

"இத்தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்கு மக்கள் தோல்வி தருவார்கள் என்பது திண்ணம். தி.மு.க. முன்பே பெருவாரியான வாக்குப் பெற்ற தொகுதி இது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னரோ, மக்களின் மதிப்பில் மேலும் ஓங்கி வந்திருக்கிறது.

"அதன் வேட்பாளராக நிற்கும் திரு. மாறன் அவர்களோ, மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான பண்பாளர்—மெத்தப் படித்தவர்—கலைஞர்—நாட்டின் நன்மைக்கான திட்டங்களை முரசொலித்து வருபவர்—துடிப்புள்ள இளைஞர்—போராட்டங்களில் அனுபவம் பெற்றவர்—சொல்லாற்றல் மிக்கவர்; எனவே, தேர்தல் முடிவு அவருக்குச் சாதகமாக இருக்குமென உறுதிகொள்ளலாம்.

"இத்தேர்தலை கௌரவமான முறையில் நடத்த திரு. அண்ணாதுரை விரும்புகிறார்; தேர்தல் பிரசாரத்தில் கண்ணியமும், கட்டுப்பாடும் கௌரவமும் காட்டுவதில் அவர் முனைந்திருக்கிறார்; இந்த நல்லுணர்வைக் காங்கிரசுக்காரர்களும் ஏற்றால், தென் சென்னைத் தேர்தல் தேசத்துக்கே வழிகாட்ட முடியும்."

—'கல்கி'

தி.மு.க. வெற்றிபெறப் பாடுபடுவோம்!

இந்துசாரி கம்யூனிஸ்டு அறிவிப்பு

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்கிஸ்டு) தமிழ் மாநிலக் குழுச் செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் அறிவிப்பதாவது:—

"தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல், விசேட முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுத் தேர்தலில் மாநில மக்களால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட காங்கிரசுக் கட்சி, தனது இழந்த செல்வாக்கை இத்தேர்தல் மூலம் மீட்கலாமென்று கனவு காண்கிறது. இத்தேர்தலில் காங்கிரசுக் கட்சியை மக்கள் மீண்டும் முறியடித்துக் காட்டுவார்களென்பது உறுதி.

"திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு. மாறன் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு (மார்கிஸ்டு)க் கட்சியின் முழு ஆதரவு உண்டு என்று நான் கூறத் தேவையில்லை. இத்தேர்தலில் திரு. மாறன் அவர்களின் வெற்றிக்கு நாம் முழு மூச்சுடன் பாடுபடுவது நமது கடமை. பொதுத் தேர்தல் இயக்கத்தைப் போன்றே மக்கள் வெள்ளம், காங்கிரசு எதிர்ப்பு அணியாகத் திரட்டப்பட்டு, திரு. மாறன் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும்.

"காங்கிரசுக் கட்சி இத்தேர்தலில் வெற்றி காண எதையும் செய்யத் துணியுமென்பதை மறப்பதற்கில்லை. கடுமையான அரசியல் போட்டியாகவே இது நடைபெறுமென எதிர்பார்க்கிறேன். எனவே, கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், திராவிட முன்னேற்ற கழகத் தேர்தல் இயக்க வேலைகளுக்கும். பிரசாரத்திற்கும் துணை நின்று சிறப்பாகச் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"தென் சென்னைத் தொகுதி மக்கள், தங்களது மேலான ஆதரவைத் தி.மு.க. வேட்பாளருக்கு அளித்து வெற்றியை உறுதிப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்."

வலது கம்யூனிஸ்டுக் கட்சி அறிவிப்பு

7—11—67-ல் நடைபெறவிருக்கும் தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக நிற்கும் முரசொலி மாறன் அவர்களை ஆதரிப்பதென, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் கவுன்சில் செயற்குழு முடிவு செய்துள்ளது.

"கடந்த பொதுத் தேர்தலில்—பல மாநிலங்களில்—காங்கிரசு, ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டது.

"மத்திய அரசாங்கத்தில் குறுகிய மெஜாரிட்டியுடன் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரசு, பல மாநிலங்களில் ஏற்பட்டிருக்கும் காங்கிரசல்லாத மந்திரி சபைகளை செயல்பட முடியாதபடி பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி, நாளடைவில் அவைகளைக் கவிழ்க்கவும் முயற்சித்து வருகிறது.

"இத்தகைய காங்கிரசு ஆட்சி மத்திய அரசிலிருந்தும் அகற்றப்பட வேண்டும். இதன் மூலம்தான், மத்தியிலும் மாநிலங்களிலும், சனநாயக ஆட்சி நிலைக்க முடியும்.

"மத்தியில் காங்கிரசல்லாத சனநாயகக் கட்சிகளின் பலம் பெருகுவதற்கு, இந்த இடைத் தேர்தலில் காங்கிரசை முறியடித்து, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வெற்றி பெற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாடுபடும்" என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கழகம் ஆதரவு

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"தென் சென்னை பாராளுமன்றத் தொகுதிக்கு நடைபெறும் இடைத் தேர்தலில் தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிடும் மாறனுக்கு தமிழரசுக் கழகத்தின் ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அவர் வெற்றி, கூட்டணியின் வெற்றியாகும். பொதுத் தேர்தலின்போது கூட்டணிக்கு தென் சென்னை மக்கள் காட்டிய பேராதரவு உணர்ச்சி பூர்வமானதுதான் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபிக்க வேண்டும்.

"பாராளுமன்றத்திற்குச் செல்ல மாறன் எல்லாவகையிலும் தகுதியுடையவர். தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று சொற்பகாலமே ஆகிறது என்றாலும், அதற்குள் பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளது; அதனைப் பாராட்டும் முறையிலும், தென் சென்னை வாக்காளர்கள் தி.மு.க. வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

"சென்னையில் உள்ள தமிழரசுக் கழகக் கிளைகளும், ஊழியர்களும், தி. மு. க. வேட்பாளருக்கு ஆதரவாக வேலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

பொய்ச் செய்திக்கு மறுப்பு

"சென்னை — புளியந்தோப்பு 33-வது வட்டத்தைச் சார்ந்த வீராசெட்டித் தெருவில், 8—10—67 அன்று, இரவு சுமார் 8 மணியளவில், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த முருகேசன் என்பவர் கோஷ்டிக்கும்—ஜனசங்கத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் கோட்டிக்கும் தகராறு ஏற்பட்டது. இது போன்ற கோஷ்டிச் சண்டைகள் அந்தப் பகுதியில் அடிக்கடி நடைபெறுவது வழக்கம்.

"இந்தக் கலவரத்துக்குக் காரணம், மகாத்மா காந்தி தேசிய சங்கத்தின் முன்னாள் தலைவர் ஏழுமலை என்பவரின் மாமன் மகளை ஜனசங்கத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் கடத்திக் கொண்டுபோய்விட்டதே என்று சொல்லப்படுகிறது.

"இந்தக் கலவரத்துக்கும்—தி. மு. கழகத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மேலும் பாலகிருஷ்ணன் எங்கள் வட்டத்தில் தி.மு.க. உறுப்பினராகவும் இல்லை — ஆதரவாளராகவும் இல்லை என்பதைக் கழகத் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தி. மு. கழகத்தைச் சார்ந்த யாரும், யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை என்பது இரு தரப்புக் கோஷ்டியினருக்கும் தெரியும். வேண்டுமென்றே பிரச்சினையைத் திசை திருப்பி 'காங்கிரசுக்கும் — தி.மு.க.-வுக்கும் மோதல்; பாலகிருஷ்ணன் என்பவர் தி.மு.க. உறுப்பினர்' என்றும், 'தி.மு.க. ஆதரவாளர்' என்றும் பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றன காங்கிரசு ஏடுகள்! இதைப் பொதுமக்களும், கழகத் தோழர்களும் நம்பவேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று, சென்னை 33-வது வட்ட தி.மு.க. செயலாளர் இரா. நாராயணசாமி அறிவிக்கிறார்.

சுக்கிரனை நெருங்கிச் செல்லுகிறது அமெரிக்க விண்வெளிக் கோள்

நான்கு திங்களில் 21 கோடி மைல் பயணம்

கடந்த சூன் 14-ந் தேதி பிளோரிடா மாநிலத்திலுள்ள கென்னடி முனையிலிருந்து 5-வது மாரினர் கோள், சுக்கிரனை நோக்கித் தன் பயணத்தைத் தொடங்கியது. நான்கு மாதம் 2¼ கோடி மைல் தொலைவு விண்வெளியில் பயணம் செய்து, அக்டோபர் 19-ந் தேதி சுக்கிரனை அது தாண்டிச் செல்லும். அன்று பூமி சுக்கிரனிலிருந்து 4 கோடியே 95 இலட்சம் மைல் தொலைவில் இருக்கும்.

சுக்கிரனில் உயிரினம் இருந்தாலும், மாரினரிலுள்ள கருவிகள் அதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் சுக்கிரனின் மேல்பரப்பு, மேசம் இவற்றின் தட்ப வெப்பங்களையும், சுற்றியுள்ள வாயுமண்டலம் எதனாலாவது என்பதையும், மேல்பரப்பின் தன்மைகளையும் அக் கருவிகள் கண்டறிந்து அறிவிக்கும்.

சுக்கிரனில் உயிரினம் உண்டா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் அவை தரும் விவரங்கள் பெரிதும் துணை செய்யும்.

5-வது மாரினர், சுக்கிரனுக்கு மிக அருகில் செல்வதால், மேகத்தின் உச்சிமுதல் சுக்கிரனின் மேல்பரப்பு வரையிலுள்ள பல வேறு தட்பவெப்ப நிலைகளையும் பதிவு செய்து அது அறிவிககும்.

விஞ்ஞானிகளை ஊக்குவிக்கிறது பாகிஸ்தான்!

கடந்த ஐந்தாண்டுகளில், வேளாண்மை — பொறியியல் — தொழில் நுட்பம்—மருத்துவம் — இயற்கை விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்து குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்த விஞ்ஞானிகளுக்கு நான்கு தங்கப் பதக்கங்களையும், ஆளுக்கு ரூ. 1,000 வீதம் ரொக்கத்தையும் அளிக்கப் பாகிஸ்தான் விஞ்ஞானக் கழகம் முடிவு செய்துள்ளன.

இழவுக்குப் போன இடத்திலுமா இந்தி வெறி!

எந்த வெறிக்கும் ஓர் அளவு உண்டு; இடம் பொருள் உண்டு; இல்லையா?

அதுவும் இழவுச் சேதி கேட்டுத் துக்கம் விசாரிக்க வந்த இடத்தில் கூடவா வெறிப் பேச்சு?

சே, சே! இந்த இந்தி வெறியர்களுக்கு என்னதான் புத்தி வருமோ, தெரியவில்லே!

டாக்டர் ராம் மனோகர் லோகியாவின் பொன்னுடல் மின்தியில் வெந்துகொண்டிருக்கையில், பலரும் அவர் பண்பை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

'நேற்று வரை காடாளுமன்றத்தின் எதிரணியில் ஏறு போல் நின்று, மத்திய அரசின் போக்கினைத் தட்டிக் கேட்டாரே—அந்த வீரப் பெருமகன் எரிதழலுக்கு இரையாளரே' என்று கண்ணீர் மல்க, வாயடைத்து மனங்குமுறி நிற்கும் நிலையிலா இந்தி வெறி?

இந்திய காடாளுமன்றத்தின் அவைத் தலைவர்—ஆந்திரத்துப் பெரியவர்—என். சஞ்சீவ ரெட்டி அவர்கள், மறைந்த டாக்டர் லோகியாவின் மாண்பு பற்றிச் சில சொற்கள் சொல்ல எழுந்தார்; அவர், மனம் கெகிழ்ந்து ஆங்கிலத்தில் பேசினார்; பொறுப்பார்களா, சம்பத்க சோஷலிஸ்டு வெறியர்கள்? 'இந்தியில்தான் சஞ்சீவ ரெட்டியார் பேசவேண்டும்' என்று ஆர்ப்பரித்தார்களாம்!

அற்பத்தனமாகத்தான் இருக்கிறது! இருந்தாலும் சஞ்சீவ ரெட்டி பொறுமையுடன்,

"துவ.சேப்து இந்தக் கூட்டத்தில் மொழிப் பிரச்சினையைக் கொண்டுவராதீர்கள்; இந்தியில் பேசலில்லே என் பதற்காக என்னே மன்னியுங்கள்; நான் தென்னகத்தைச் சேர்ந்தவன்; ஆகவே, எனக்கு இந்தி சரியாகப் பேச வராது" என்று கூனிக் குறுகிச் சொல்லி இருக்கிறார்.

'முயன்றலும், தென்னகத்தானுக்கு சரியாக இந்தி பேச வராது' என்று சொன்ன தைரியத்துக்காக அவரைப் பாராட்டினலும், இழவுக்கு வந்த இடத்திலும் இந்தி வெறியோடே இருக்கிற வடநாட்டவரை என்ன இலக்கணத்தில் அடக்குவது?

இருக்கிற காலமெல்லாம் ராம மனோகர் லோகியா—அவருக்கு இருந்த எவ்வளவோ நல்ல பண்புகள் ஊடே—இந்தி பற்றுக் கொண்டு வெறி உமிழ்ந்து கொண்டிருந்தார்! அதனுலே பலருடைய வெறுப்பையும் அவர் வாரிக் கட்டிக் கொண்டார்; இருந்தும், அதையெல்லாம் மறந்து, நாடே அவரை வாழ்த்திக் கொண்டிருக்கிறது!

அந்த கிலேயிலுமா, எதையோ நினேவூட்டிற மாதிரி மொழிப் பிரச்சினையைக் கொண்டுவருவது?

'துக்கம்' என்று வந்தபோது, பீரங்கி முகேயில் பேசிக் கொண்டிருந்த பாகிஸ்தான் அதிபர் அயூப் கான், லால்பகதூர் சாஸ்திரிக்குத் தோள் கொடுத்தாரே!

'எங்கள் தலேவர் பிணத்தை எதிரி எடுப்பானேன்' என்று கேட்டார்கள்? கேட்பது பண்பாகுமா?

லால்பகதூரின் ஈமச் சடங்கின்போது, இராஜ கட்டத்தில் உலகத்துப் பெருங் தலேவர்கள் பலரும் தத்தம் மொழிகளில் இரங்கல் உரை ஆற்றினர்களே! யாரும் எதிர்க்கவில்லேயே! 'ஏன் இந்தியில் உரை நிகழ்த்தவில்லே' என்று கேட்கவில்லேயே!—அதுதான் பண்பு!

ஆனல், இந்தி வெறியர்களுக்கு ஏனே சகிப்புத்தன்மை இருப்பதில்லே! மக்கள் தொகைப் பதிவாளர் கணக்குப்படி, 1,200 தனித்தனி தாய்மொழிகளைக் கொண்ட வெவ்வேறு வகை மக்கள் வாழும் பரந்த துணைக்கண்டம் இது; அவற்றில் திருந்திய அமைப்புள்ள 14 மொழிகளைத் தேசிய மொழிக ளாக ஏற்றுக்கொண்டிருக்கிறது அரசியல் சட்டம்! அதனைக் கூடச் சீரணித்துக்கொள்ள -பொறுத்துக்கொள்ள மனம் இல்லேயென்ரல், மற்ற தாய்மொழிக்காரருக்கு எப்படி இருக்கும்?

திரு. சஞ்சீவி ரெட்டி, 'தெலுங்கில் பேசினல் மற்றவர்களுக்குப் புரியாமல் போய்விடுமே' என்று அஞ்சித்தான், ஆங்கிலத்தில் பேசியிருக்கிரர்; இல்லேயா?

அதைக்கூடப் புரிந்துகொள்ளவில்லே என்ரல்.....

பூத்தாவிம், காயா மரம் உள; முத்தாவிம் நன்கு அறியார் தாமும் நனி உளார்; பாத்தி வித்தைத்தாவிம், நாருத வித்துஉள; பேதைக்கு உரைத்தாவிம், தோன் முது உணர்வு!

என்று முன்துறை அரையர் பாடிய பழமொழிப் பாட்டு தான் நீங்களுக்கு வருகிறது!

—முத்து

முரசொலி மாறனைத் தேர்ந்தெடுப்பதே அறிவுடைமை

பெரியார் ஈ. வெ. ரா. வலியுறுத்தல்

முரசொலி மாறனே ஆசிரித்து பெரியார் அவர்கள், தமது 'விடுதலே' ஏட்டில் (13—10—67) எழுதியுள்ள தலேயங்கத்தில் தெரிவித்துள்ளதாவது :—

"தேன் சென்னே மக்களுக்கு நான் (ஈ.வெ.ரா.) வலியுறுத்திக் கூறுவது என்னவென்ரல், அடுத்துவரும் பார்லிமெண்ட் தேர்தலில் திரு. மாறன் அவர்களேயே தேர்ந்தெடுக்க வேண்டியது அறிவுடைமையாகும் என்பதாகும்.

"தமிழ்நாட்டில், 'பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்' என்கின்ற விஷயத்தை இதில் சம்பந்தப்படுத்தாமல், பொது அறிவைக் கொண்டே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"தமிழ்நாட்டில் இப்போது காங்கிரசு அல்லாத ஆட்சியிருப்பதால் இதைக் குறைமுடையாதாகவும், ஒழிக்கப்படவும் காங்கிரசுக் காரர் முயல்வது, பதவி வேட்டைக் காரணமாக இன்றியமை யாததாகிவிட்டது!

"நடந்த பொதுத் தேர்தலில், மக்கள், பல காரணங்களால் காங்கிரசை நல்லவண்ணம் தோற்கடித்து, காங்கிரசு அல்லாத பலமான ஆட்சியை ஏற்படுத்திவிட்டார்கள்!

"இதே மக்கள், மற்ற மாலிலங்களில் காங்கிரசின் பேரால் வெற்றி பெற்று பதலிக்காக எதிர்க் கட்சிக்கு மாறுவதனுல் ஆங்காங்குள்ள மந்திரி சபைகள் அடிக்கடி மாற்றப்படுவது போல், நாமும், 'கோள்களையற்ற பச்சை சுயநலவாதிகள்; சனகாயகத்திற்குத் தகுதியற்றவர்கள்' என்று ஆகாமல், இந்தியில் மற்ற நாட்டார் முன்பு, 'தமிழ் நாட்டாரும் அப்படித்தான்; அடிக்கடி மாற்றமடையும்—சாதாரண, தாம் மாறும் மகளிர் தான்' என்று கருதும்படியாக நடந்துகொள்ளாமல், நாட்டின் பெயரையும், நாட்டு மக்கள் ஒழுக்கத் தாத்தையும், முன்னேர் தலேல் நடந்துகொண்டபடியே இப்போதும் நடந்துகாட்டிக் காப்பாற்ற வேண்டிக்கொள்கிறேன்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

15--10--67

சென்னே 46-வது வட்டம்

மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில், மாலே 6-மணிக்கு, நம்மாள்வார்பேட்டையில்; தலேவர்: மு. செ. இராசு; பேசுவோர்: அமைச்சர் செ.மாதவன், வேலூர் டி. நாராயணன் எம்.ஏ., பி.எல்., வி. எஸ். கோவிந்த ராசன் எம்.எல்,ஏ., பரந்தாமன்.

கோபி

தி, மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு பெரியார் திடலில்; பேசுவோர்: தி மு வ ஆ. அண்ணுமலே, ஜி. என். இராசு, கே. எஸ். ஆனந்தன் பி.காம்., பி.எல்., வி. வி. வெங்கடாசலம் பி.எஸ்சி., பி.எல்., எஸ். எம். பழனியன் எம்.பி.பி.எஸ்., பி. கே. பழனியப்பன்.

நெய்வேலி

கே. வி. கே. சாமி மன்றத் துவக்க விழா; மாலே 6-மணிக்கு புதுநகரில்; தலேவர்: மு. சு. மணி பி.ஏ., பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ. மற்றும் பலர் (முருகு பாண்டியனின் பலகுரல் கலே நிகழ்ச்சி நடைபெறும்.)

பம்பாய்

அறிஞர் அண்ணு மன்றச் சார்பில் மாலே 6-மணிக்கு வள்ளுவர் திடலில் (மாதுங்கா லேபர் கேம்ப் எக்ஸ்டர்லா பேட்ரி கம்பெனி எதிரில்); தலேவர்: சி. சிங்காரவேலன்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, நா. கிருட்டினன், சு. வள்ளிகாயகம், தொ. து. அன்புச்செழியன், எஸ். தியாகராசன், கொ.வள்ளுவன், களத்தூர் சு. நேவீசு, எஸ். ஏ. அப்துலலா.

16--10--67

திருப்பூர்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு கோட் டைக்காடு அண்ணு திடலில்; தலேவர்: கே. பி. செல்வன்; பேசுவோர்: டிடிகர் கே. கண்ணன், சு. துரை சாமி எம்.எல்.,ஏ. கே. எஸ். மணி எம்.சி., வே. சு. மணி, என். கந்தசாமி பி.ஏ.,பி.எல்., க. பழனிச்சாமி பி.ஏ., பி.டி., ப. தண்டபாணி, தி. த. பெரியசாமி.

காரைக்குடி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு, காந்தி திடலில்; தலேவர்: பெரி. அழகு; பேசுவோர்: அமைச்சர் முத்துச்சாமி பி. ஏ பி.டி., எஸ். எஸ். தென்னரசு.

திருக்குறள் மாநாடு

முதலமைச்சர் அண்ணு கலந்துகொள்கிறார்

சென்னே—இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றச் சார்பில் இரண்டாவது திருக்குறள் மாநாடு 15—10—67 காலே 9-மணிக்கு இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெறும்.

மாநாட்டுக்குப் பேராசிரியர் அன்பு கணபதி தலேமைசிப்பார்; நா. பாண்டுரங்கன் எம்.ஏ., வர வேற்புரையாற்றுவார்.

காலே 10-45 மணிக்கு அமைச்சர் மா. முத்துசாமி தலேமையில் கலியரங்கமும், கடைபெறும்; கவிஞர்கள் பலர் பங்கேற்பர்.

பிறபகல் 2-30 மணி முதல் கொறபொழிவுகள் நடைபெறும்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு மற்றும் அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து, பேராசிரியர் அன்பழகன், கி. மனோகரன், எஸ். எஸ். இராசேந்திரன், பேராசிரியர் இலக்குவனர், ஏ. பி. சனார்த்தனம், முரசொலி மாறன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

இரயில்வேயில் கணக்கீட்டு இயந்திரத் நிலைப்பு

எதிர்த்து ஊழியர்கள் உண்ணுநோன்பு

சென்னை, அக். 13—கணக்கீட்டு இயந்திரத் தினிப்பை எதிர்த்து ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து உண்ணு நோன்புப் போராட்டம், தென். பிராங்கிய இரயில்வே மஸ்தூர் யூனியன் சார்பில் நடந்துவருகிறது.

தேரழகன் ராயில் பொருண்டஸ், எம். ஏழுமலே, சிறறம்பலம் ஆகிய மூவர், தலேமை அலுவலகத்தின்முன் உண்ணு நோன்பு இருந்துவருகின்றனர்.

டாக்டர் எம்.சந்தோஷம் எம்.பி., டாக்டர் எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ. ஆகியோர் வந்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

திரு. கி. மஞ்சுகரன் எம்.பி அவர்களும் தேரழகனச் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்; மேலும் அவர், இரயிலே அமைச்சர் பூஜுச்சர் அவர்களே உடனடியாக ஆவன செய்யும்படி தந்தி மூலம் தகவல் தெரிவிப்பதாக வாக்களித்தார்.

திரு. ஜி. குசேலர் எம்.பி. அவர்களும் வந்திருந்து எங்களது போராட்டத்தில் மிகவும் சிரத்தை காட்டினர்.

குழுக் கூட்டம்

திருவொற்றியூர் நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 15—10—67 மாலே 6-30 மணிக்கு, திரு வொற் றியூர் சன்னதித் தெரு, மாங்காடு எல்லப்ப செட்டியார் சத்திரத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. தலேமையில் நடைபெறும். சி. வி. எம். அண்ணுமலே எம்.எல்.ஏ., சி. இராமலிங்கம், க. அறிவழகன் எம்.எல்.சி., பி. சிவசங்கரன் எம்.பி., அ. பொ. அசுசு எம்.எல்.ஏ. ஆகியோரும் கலந்துகொள்வர்.

குத்தூசி குருசாமி நினேவு நாள்

குத்தூசி குருசாமி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினேவு நாள் விழா, 15—10—67 மாலேயில் கோட்டம்பாக்கம் மேஜர் டிரஸ்டிபுரம் சமூகக் கூடத்தில் நடைபெறும்; மாலே 5-மணிக்கு பல கவிஞர்கள் பங்கேற்கும் கவியரங்கம் நடைபெறும்; இரவு 7-மணிக்கு படத் திறப்பு விழாவும், சொற்பொழிவும்; அமைச்சர் சத்திய வாணிமுத்து மற்றும் பல கட்சி கலேச் சேர்ந்தோரும் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணு படத் திறப்பு

திருவான்மியூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 18—10—67 காலே 10-30 மணிக்கு அறிஞர் அண்ணு அவர்களின் உருவப் படத்தை திரு. ப. சிவகங்கரன் எம்.பி. திறந்துவப்பார்; திரு. ர. இராமமூர்த்தி இனிப்பு வழங்குவார்.

நான்காம் திட்டத்துக்கு இரஷ்ய உதவி!

ரூ. 4.20 கோடி ஒதுக்கீடு!

மாஸ்கோ, அக். 12—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியாவுக்கு இரஷ்யா ரூ. 4.20 கோடி உதவியளிக்க வகை செய்யும் உடன்படிக்கை ஒன்று அறிவிக்கப்பட்டது.

பொறியியல் திட்டங்களில் இரஷ்ய ஒத்துழைப்புக்கு இதில் வகை செய்யப்படும்.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள தங்கம்

"பாகிஸ்தானத்தில் தனியார் கையில் குறைந்தது ரூ. 750 கோடி மதிப்புள்ள தங்கம் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது' என்று உலக பாங்கி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

"மக்கள் தம்மிடமுள்ள தங்கம் அனேத்தையும் அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனு ஆகிய நாடுகளுடன்போன்று அரசிடம் விற்று விட்டால், நாட்டின் தங்கு இருப்பு நான்கு மடங்காகிவிடும்" என்று அவர் குறிப்பிட்டார்.

விழுப்புரத்தில் கலேக் கல்லூரி

விழுப்புரம், அக். 10—"அடுத்த ஆண்டில் இங்கேயில் கலேக் கல்லூரி ஏற்படுத்தப் படும்; அதற்குத் தேவையான 4 ஏக்கர் நிலமும் 5இலட்சம் ரூபாயும் பொதுமக்கள் ஈன்கொடையாக அளிக்க முன்வரவேண்டும்; கட்சிப் பாகுபாடில்லாமல் விழுப்புரம் வட்டத்திலுள்ள மக்கள் தாராளமாக நன் கொடை வழங்க வேண்டும்" என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி இங்கு பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

நேரில் முன்னேற்றம் தெரிந்திடவே, நெடு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு புதுமுகம் அச்சகத்தில் (24, முனுசாமி நாயுடு தெரு, வேப்பேரி, சென்னை-7) அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.